பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 11 திங்கட்கிழமை 18.04.2022 கதிர் 33

## 11 வாகனங்கள் மோதி விபத்து!

### - மூவர் வைத்தியசாலையில்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 11 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

கௌனிகம - தொடங்கொடை ஆகிய பகுதிகளுக்கிடையில் நேற்றிரவு 2

# ஜனாதிபதி முன்னிலையில் 17 அமைச்சர்கள் பதவியேற்பு





- கோட்டா, மஹிந்த, பீரிஸ், சப்றியின் பதவிகளில் மாற்றம் இல்லை
- பஸில், சமல், நாமலுக்கு எந்தப் பொறுப்பும் இல்லை
- ஜோன்சன் உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் ‘அவுட்’
- ‘20’ஐ ஆதரித்த நஸீருக்குச் சுற்றுச்சூழல்
- பெண்கள் எவருக்கும் அமைச்சு இல்லை

புதிய அமைச்சரவை அமைச்சர்கள் 17 பேர் இன்று முற்பகல் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர். 2

## அரசமைப்பை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவை பிரதமரே முன்வைப்பார்

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக் கூடிய விதத்தில் அரசமைப்பை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவை பிரதமரே முன்வைப்பார் என இன்று புதிய அமைச்சரவை பதவியேற்றதன் பின்னர் பிரதமரின் ஊடக பிரிவு விடுத்த் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் விவரம் வர்மாறு:

மக்களுக்கு பொறுப்புக்கூறும் அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கு பல்வேறு தரப்பினரும் முன்வைத்த கோரிக்கைகளை 2

## இன்றிரவு 7.30 மணிக்கு ஜனாதிபதி விசேட உரை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட உரை இன்றிரவு 7.30 மணிக்கு அனைத்து தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளிலும் ஒளிபரப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2

## மாற்றப்பட வேண்டியவர் பிரதமரே; அமைச்சரவையை ஏற்க முடியாது!

### - சுதந்திரக் கட்சி கடும் சீற்றம்



பிரதமர் பதவியில் மாற்றமின்றி இடம்பெற்ற அமைச்சரவை மறுசீரமைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மக்களின் கோரிக்கைக்கு செவிமடுக்காமல், அமைச்சுப் பதவியை ஏற்றவர்களுக்கு மக்கள் 2

## அரசை ஆதரிப்பதா? இன்னும் முடிவில்லை

### அரவிந்குமார் எம்.பி. கூறுகின்றார்



பிரதான எதிர்க்கட்சியால் அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை என்பனவற்றுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் தான் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லையென்று பதுளைமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி குறித்த பிரேரணைகளை நாடாளு 2

## கோட்டாபய அரசுக்கு எதிராக புதனன்று நாடு தழுவிய தொழிற்சங்கப் போராட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் அரச ஊழியர்கள் தமது கடுமையான எதிர்ப்பை எதிர்வரும் 20ஆம் திகதி புதன் 2

## பஸிலின் எம்.பி. பதவிக்கும் ஆப்பு?

### 19ஐ மீண்டும் செயற்படுத்துவதற்கு கோட்டா பச்சைக்கொடி காட்டியமையால்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற உறுப்புரிமையும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே அவரிடமிருந்து நிதி அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது எம்.பி. பதவியையும் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி, 19 ஐ மீண்டும் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டியுள்ளார் எனத் 2

## நாடாளுமன்றத்தைக் கலைக்கின்ற யோசனைக்கு ஆளுங்கட்சி எதிர்ப்பு

### வரலாறு காணாத தோல்வி ஏற்படும் என்பதால்

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வுகாண நாடாளுமன்றத்தைக் கலைக்கும் யோசனையைநிறைவேற்றி, பொதுத்தேர்தலுக்கு செல்லலாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால்முன்வைக்கப்பட்ட யோசனையை ஆளுங்கட்சி பிரமுகர்கள் நிராகரித்தனர் 2

## ஜனாதிபதி முன்னிலை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் நிதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோரின் அமைச்சுக்களில் மாற்றங்கள் செய்யப்படவில்லை.

தினேஷ் குணவர்தன வகித்த கல்வி அமைச்சு ரமேஷ் பத்திரனவுக்கு வழங்கப்பட்டுள்ளது. தினேஷ் குணவர்தனவுக்குப் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜோன்சன் பெர்னாண்டோவிடமிருந்து நெடுஞ்சாலைகள் அமைச்சு பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு எந்தவொரு அமைச்சுப் பதவியும் வழங்கப்படவில்லை.

அமைச்சரவையில் அங்கம் வகித்துப் பதவிகளை இராஜிநாமா செய்த ஆளும் தரப்பின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை. இராஜாங்க அமைச்சர்களாகச் செயற்பட்ட 11 பேர் புதிய அமைச்சரவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களான பஸில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்குப் புதிய அமைச்சரவையில் எவ்வித பொறுப்பும் கையளிக்கப்படவில்லை.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட்டுக்கு சுற்றுச்சூழல் அமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

பெண்கள் எவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அமைச்சரவை அமைச்சர்கள் 17 பேரின் விவரங்கள் வருமாறு:-

01. தினேஷ் குணவர்தன - பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

02. டக்ளஸ் தேவானந்தா - கடற்றொழில் அமைச்சர்

03. ரமேஷ் பத்திரன - கல்வி, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

04. பிரசன்ன ரணதுங்க - பொதுமக்கள் பாதுகாப்பு, சுற்றுலா அமைச்சர்

05. திலும் அமுனுகம - போக்குவரத்து, கைத்தொழில் அமைச்சர்

06. கனக ஹேரத் - நெடுஞ்சாலைகள் அமைச்சர்

07. விதுர விக்ரமநாயக்க - தொழில் அமைச்சர்

08. ஜானக வக்கும்புர - விவசாயம், நீர்ப்பாசனம் அமைச்சர்

09. ஷெஹான் சேமசிங்க- வர்த்தகம், சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர்

10. மொஹான் பிரியதர்ஷன டி சில்வா - நீர் வழங்கல் அமைச்சர்

11. விமலவீர திஸாநாயக்க - வனவிலங்கு மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சர்

12. காஞ்சன விஜேசேகர - வலுசக்தி, மின்சக்தி அமைச்சர்

13. தேனுக விதானகமகே - இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர்

14. நாலக கொடஹேவா - வெகுசன ஊடக அமைச்சர்

15. சன்ன ஜயசுமன - சுகாதார அமைச்சர்

16. நஸீர் அஹமட் - சுற்றுச்சூழல் அமைச்சர்

17. பிரமித பண்டார தென்னக்கோன் - துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர்.

## 11 வாகனங்கள்......

இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த வாகன விபத்தில் 3 பேர் காயமடைந்த நிலையில், நாகொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## இன்றிரவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அமைச்சரவையில் ஜனாதிபதி ஆற்றிய உரையே இவ்வாறு ஒளிபரப்பப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மாற்றப்பட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடம் புகட்டுவார்கள் எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

17 பேருடன் புதிய அமைச்சரவை இன்று பதவியேற்றுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே புதிய அமைச்சரவை நியமனத்தை சுதந்திரக் கட்சி எதிர்த்துள்ளது.

புதிய பிரதமர் தலைமையில் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசு மலர வேண்டும் எனவும் அக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

## அரசை ஆதரிப்பதா..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் முன்வைக்கும்போது, அதற்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்ற தீர்மானம் தன்னால் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்குமாறு அரச தரப்பிலிருந்து தனக்கு எந்தவொரு அழைப்பும் விடுக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தால் மலையக மக்கள் முன்னணியிலிருந்து அரவிந்குமார் நீக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது..

## கோட்டாபய அரசு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை வெளிப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைவரும் பதவி விலக வேண்டும் என்று அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் வலியுறுத்தி வருகின்ற நிலையில் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைப் பிரதானமாகக் கொண்டு புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் புதன்கிழமை நாடுதழுவிய தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெறவுள்ளது என்று அரச ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

## பஸிலின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் வெளியாகியுள்ளது. 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள், நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனவே, 20ஆவது திருத்தம் நீக்கப்பட்டால் பஸிலுக்கு எம்.பி. பதவியை இழக்க நேரிடும்.

இதற்கிடையில் -

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான சட்டத்திருத்தத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தாமே நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிப்பார் என்பதை வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்றை இன்று மாலையில் வெளியிட இருந்தார் என இன்று மதியம் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## நாடாளுமன்றத்தை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரியவருகின்றது. அரசு வசம் சாதாரண பெரும்பான்மை (113) இருப்பதாலும், தற்போதைய சூழ்நிலையில் தேர்தலுக்குச் சென்றால் அது ஆளுந்தரப்புக்கு வரலாறு காணாத பின்னடைவை ஏற்படுத்தும் என்பதாலுமே 'தேர்தலுக்குச் செல்லும்' யோசனை நிராகரிக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கும், பதவி துறந்த அமைச்சர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல் நிலைவரம் பற்றியும், அரசியல் நெருக்கடிக்கான தீர்வுகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன. இதன்போது ஜனாதிபதியால் மூன்று யோசனைகள் முன்மொழியப்பட்டன.

அரசமைப்பின் பிரகாரம் தனக்கு இரண்டரை வருடம் செல்லும்வரை நாடாளுமன்றத்தை கலைக்க முடியாதென்பதால், ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் ஊடாக யோசனையொன்றை முன்வைத்து நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தலுக்கு செல்லலாம் என ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட முதல் யோசனையை அவர் கள் ஏற்க மறுத்தனர்.

அதேபோல் பிரதமர் பதவி விலகி, ஆட்சியை முன்னெடுக்க எதிரணிக்கு வாய்ப்பை வழங்கலாம் என முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் முன்னாள் அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். அரசு வசம் சாதாரண பெரும்பான்மை இருப்பதால் அதற்கான தேவைப்பாடு எழவில்லை, நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தால்கூட அதனைத் தோற்கடிக்கலாம் என ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

இறுதியாக குறைந்த உறுப்பினர்களுடன் அமைச்சரவையை அமைக்கலாம், சிரேஷ்ட உறுப்பினர்கள் விட்டுக் கொடுப்புகளை செய்ய வேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதி முன்வைத்தார். அதற்கு சரத் வீரசேகரவைத் தவிர ஏனையோர் ஆதரவைத் தெரிவித்தனர்.

அந்தவகையிலேயே புதிய அமைச்சரவையை நியமிக்கத் திட்டமிடப்பட்டது எனத் தெரியவருகின்றது.

## அரசமைப்பைத்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனத்திற் கொண்டு, அது தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் மற்றும் சட்டவாக்க சபை போன்றே நீதித்துறையின் சாத்தியமான கருத்துக்களை உள்ளடக்கிய அரசமைப்பை திருத்துவதற்கான முன்மொழிவொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு கௌரவ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் எதிர்பார்த்துள்ளார்.

அத்திருத்தப்பட்ட அரசமைப்பினூடாக மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும் என்பது கௌரவ பிரதமரின் எதிர்பார்ப்பாகும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## இனி போதாத காலம்

நாம் இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியபடி தலையிடிக்கு தலையணை மாற்றும் சிகிச்சை செய்ய முயற்சித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

புதிய அமைச்சரவை ஒன்றை நியமித்த அவரின் நடவடிக்கை அப்படித்தான் தெரிகின்றது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்தப் புதிய அமைச்சரவை உருவாக்கம் எந்த வகையிலும் தீர்வை தரப்போவதில்லை. மறுவழமாகப் பார்த்தால் அது மென்மேலும் பிரச்சினைகளை – நெருக்கடிகளை – தீவிரமாக்கும்.

ஐந்து ராஜபக்ஷக்கள் இருந்த அமைச்சரவையில் மூன்று ராஜபக்ஷக்கள் விலக்கப்பட்டிருக்கின்றமை சிறிது முன்னேற்றம்தான். இந்த நடவடிக்கை மூலம் – ராஜபக்ஷக்கள் மூவர் அமைச்சரவையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டமை மூலம் – இதுவரை குடும்ப ஆட்சிதான் தொடர்ந்தது என்ற மக்களின் அதிருப்தியை ஜனாதிபதியும் பிரதமரும் ராஜபக்ஷ சகோதரர்கள் – ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், இது விடயத்தில் மக்களின் வலிமையான கோரிக்கை நிறைவு செய்யப்படவில்லை என்பதுதான் உண்மை. அண்ணனும் தம்பியுமாக – ராஜபக்ஷக்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இரு பதவிகளை வைத்திருப்பது ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் பெரும்பிடி தான் என்பதே உண்மை. ஆட்சி பீடத்தில் இருந்து ராஜபக்ஷக்கள் அடியோடு விலக வேண்டும் என்பதுதான் இன்று அரசுக்கு எதிரான புரட்சியில் இறங்கி இருக்கும் பொதுமக்களின் கோரிக்கை. அது ஏற்று நிறைவு செய்யப்படவில்லை என்பதுதான் நிலைமை. அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து குரல் கொடுத்து வரும் மக்கள் போராட்டத்திற்கு செவிசாய்க்க மாட்டேன் என்ற செய்தியைத்தான் இந்த அமைச்சரவை மாற்றம் மூலம் உறுதிப்படுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அதனால் இந்த அமைச்சரவை மாற்றம் கோட்டாபய எதிர்ப்பாளர்களை மேலும் அதிருப்திக்குள் தள்ளி, சீற்றத்தையும் அரசு எதிர்ப்பு எழுச்சியையும் தீவிரப்படுத்தத் தூண்டும் என்பது துலாம்பரமானது.

அது மாத்திரமல்ல, அரசு ஆதரவுத் தரப்பில் இருந்து வெளியேறி, சுயாதீனமாக இயங்க முடிவெடுத்த சுமார் 40 எம்.பிக்களை கொண்ட குழுவினரையும் இந்த நடவடிக்கை ஆட்சித் தரப்பில் இருந்து நிரந்தரமாக தள்ளிவைத்திருக்கின்றது என்பதும் தெளிவானது.

அவர்களின் இடைக்கால அரசு அமைத்தல், காபந்து அல்லது தேசிய அரசு அமைத்தல் போன்ற திட்டங்களை எல்லாம் தமது புதிய அமைச்சரவை நியமனம் மூலம் ஒரேயடியாக மூடி நிராகரித்து புறக்கணித்து விட்டார் ஜனாதிபதி.

ஆகையினால் அவர்களும் கறுவிக் கொண்டு தங்கள் கைவரிசையைக் காட்ட இனிமேல் எத்தனிப்பர் என்பது திண்ணம்.

குறிப்பாக விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார குழுவினர் மற்றும் சுதந்திரக் கட்சி எம்.பிக்களின் கூட்டுச் செயற்பாடு ராஜபக்ஷக்கள் ஆட்சிப் பீடத்திற்கு மிகுந்த நெருக்கடியைத் தரும் என்பது நிச்சயம்.

நேற்று இந்தப் பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி, புதிய அரசியல் குழப்பத்திற்கான தளத்தில் – களத்தில் – தெளிவான கோடு இந்த அமைச்சரவை நியமனம் மூலம் வரையப்பட்டு விட்டது.

நாம் மேலே குறிப்பிட்ட 40 எம்.பிக்கள், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட தமிழ்க் கட்சிகள் என அனைத்துத் தரப்பு எம்.பிக்கள் எல்லாம் இப்போது அந்த கோட்டில் ஒரு பக்கத்தில்.

இ.தொ.காவின் இரண்டு எம்.பிக்கள் போன்று ஓரிருவர் மதில்மேல் பூனையாக கோட்டின் மீது இருக்கலாம்.

மற்றபடி அரசியல் துவந்த யுத்தத்திற்காக எதிரெதிர் தரப்புக்கள் களத்தில் நிலை எடுத்து விட்டன. மோதலுக்கான விசிலும் ஊதப்பட்டுவிட்டது.

அரசியல் முரண்பாடுகள், பிணக்குகளின் உச்ச அதிர்வை நாடு இனி எதிர்கொள்ளும்.

# நாட்டு மக்கள் ஏன் வெறுக்கின்றார்கள் என்பதை ஜனாதிபதி இன்னும் விளங்கிக்கொள்ளவில்லை!

## திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு



அரசாங்கத்திலிருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 41 பேர் நாடாளுமன்றில் ஒரு குழுவாக அமர்வதற்கு ஆசன ஒதுக்கீட்டை ஏற்படுத்திக்கொடுக்குமாறு சபாநாயகரிடம் கோரவுள்ளோம்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் அதிருப்தியளிக்கின்றன. மக்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் செயற்படவில்லை என லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் இருந்து விலகிய 11 பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தையும், அவர் தலைமையிலான அரசாங்கத்தையும் நாட்டு மக்கள் ஏன் ஒன்றிணைந்து வெறுக்கிறார்கள் என்பதை ஜனாதிபதி இன்னும் விளங்கிக்கொள்ளவில்லை.

மக்களின் வெறுப்பை பெற்றுக்கொண்டு ஆட்சியதிகாரத்தை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்ல முடியாது என்பதற்கு இலங்கை அரசியல் வரலாற்றில் பல சம்பவங்கள் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்து குறுகிய கால கொள்கை அடிப்படையில் செயற்படுவது அவசியமானதுடன், வெகு விரைவில் பொதுத்தேர்தலை நடத்தி மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதையும் ஜனாதிபதிக்கு வலியுறுத்தினோம்.

புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்து மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை. மக்களால் வெறுக்கப்படும் அமைச்சரவையையே மீண்டும் நியமிக்க அவர் அதிக அவதானம் செலுத்தியுள்ளார்.

கொள்கைக்கு முரணாக ஆட்சியாளர்கள் செயற்பட்டதன் காரணத்தால் அரசாங்கத்திலிருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படுகிறோம்.

நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 41 பேர் ஒரு குழுவாக நாடாளுமன்றில் அமர்வதற்கு ஆசனம் ஒதுக்கித் தருமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளோம்.

நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் சூழலை ஏற்படுத்திக்கொடுக்குமாறும் வலியுறுத்தவுள்ளோம்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் நடைமுறைக்கு பொருந்தும் வகையில் எவ்வித திட்டங்களையும் செயற்படுத்தவில்லை. பிரச்சினைகளுடன் வாழ்வதற்கு மக்கள் தங்களை பழக்கப்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

# எரிபொருள் விநியோகம் இன்று முதல் வழமைக்கு!

இன்று (திங்கட்கிழமை) எரிபொருள் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஆயிரத்து 500 மெற்றிக் தொன் பெற்றோலை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 41 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் ஏற்றிச் செல்லும் கப்பல் வந்துள்ள நிலையில் எரிபொருளை இறக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

ஆயினும் இன்றும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 'பெற்றோல் இல்லை', 'டீசல் இல்லை' என்ற பதாதைகள் தொங்கவிடப்பட்டிருந்தமையையும் மற்றும் சில நிலையங்களில் வழங்கப்பட்டாலும் மக்கள் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது.

# திட்டத்தை மக்கள் சக்தி தெளிவுபடுத்தாததாலேயே நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் நடுவு நிலைமை!

## விளக்குகிறார் ஜீவன்



அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 113 ஆதரவைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால், அதன் பின்னர் தமது வேலைத்திட்டங்கள் என்ன என்பதை ஐக்கிய மக்கள் சக்தி இதுவரையில் தெளிவுபடுத்தவில்லை.

இதன் அடிப்படையிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த விடயத்தில் நடுநிலைமை வகிப்பதாக அறிவித்தது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில் –

ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பிக்கவுள்ள அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக கையெழுத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாட்டை அண்மையில் நாம் அறிவித்திருந்தோம்.

இந்த விடயத்தில் நாம் நடுவுநிலைமை வகிப்போம் என்பதையே எமது நிலைப்பாடாக அறிவித்திருந்தோம்.

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது.

அதற்கு ஆதரவு தெரிவிப்பதிலும் எவ்வித பிரச்சினையும் கிடையாது. ஆனால் இது தொடர்பில் எதிர்த்தரப்பினர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். 113 ஆசனங்கள் காணப்பட்டால் மாத்திரமே அரசாங்கத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

எதிர்த்தரப்பிலிருந்து 113 ஆதரவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால், அவர்களின் எதிர்காலத் திட்டம் என்ன என்பதையும் எமக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

ஆனால் அவர்களின் எதிர்காலத் திட்டம் தொடர்பில் இதுவரையில் யாருக்கும் தெளிவுபடுத்தவில்லை.

இதன் அடிப்படையிலேயே நாம் நடுவுநிலைமை வகிப்போம் என அறிவித்துள்ளோம். எதிர்வரும் ஓரிரு நாள்களில் இது தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெறும் என்று எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னர் நாம் தீர்க்கமான தொரு முடிவை எடுப்போம். – என்றார்.

# தஞ்சமடையும் அகதிகளை ருவாண்டாவுக்கு அனுப்பும் இங்கிலாந்து



இங்கிலாந்தில் தஞ்சமடையும் அகதிகளை கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவுக்கு அனுப்பும் புதிய திட்டத்தை இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் அறிவித்திருக்கிறார்.

இதன் மூலம் இங்கிலாந்தில் சிறிய படகுகள் வழியாக தஞ்சமடைபவர்களை அந்நாட்டிலிருந்து 6,400 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள ருவாண்டாவுக்கு இங்கிலாந்து அரசு அனுப்பியிருக்கிறது. சட்டவிரோத புலம்பெயர்வை தடுப்பதற்கான நடவடிக்கையாக சொல்லப்படும் இதனை இங்கிலாந்து எதிர்க்கட்சியினரும் அகதிகள் நல செயல்பாட்டாளர்களும் 'மனிதாபிமானமற்றது, மக்கள் பணத்தை வீணடிப்பது' என கடுமையாக விமர்சித்துள்ளனர்.

அதே சமயம், இங்கிலாந்து மற்றும் ருவாண்டா ஆகிய இரு நாடுகளும் இத்திட்டத்தை பொருளாதார வளர்ச்சிக்கான கூட்டு ஒப்பந்தம் எனக் குறிப்பிட்டுள்ளன.

இது அகதிகளை வஞ்சிக்கும் திட்டம் எனக்கூறி இத்திட்டத்துக்கு எதிராக இங்கிலாந்து உள்துறை அலுவலகம் எதிரே நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டத்தையும் நடத்தியிருக்கின்றனர். கடந்த ஆண்டு மட்டும் சிறிய படகுகள் வழியாக சுமார் 28 ஆயிரம் இங்கிலாந்தில் தஞ்சமடைந்திருக்கின்றனர், இந்த எண்ணிக்கை கடந்த 2020 இல் 8,500 ஆக இருந்தது.

கடந்த 2013ஆம் ஆண்டு இவ்வாறு தஞ்சமடையும் அகதிகளை வேறொரு நாட்டுக்கு அனுப்பும் செயலை முதன் முதலில் ஆஸ்திரேலிய அரசு தொடங்கியது. படகு வழியாக ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைய முயல்பவர்களை ஒரு போதும் ஆஸ்திரேலியாவில் குடியமர்த்த மாட்டோம் எனச்சொல்லிய ஆஸ்திரேலிய அரசு, அகதிகளை அருகாமை தீவு நாடுகளான பப்பு நியூகினியா மற்றும் நவுருத்தீவில் உள்ள கடல் கடந்த தடுப்பு முகாம்களுக்கு அனுப்பியது. இவ்வாறு அனுப்பப்பட்ட பல அகதிகள் கடந்த 10 ஆண்டுகளாக பல்வேறு இன்னல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாகி இன்றும் நிச்சயத்தன்மையற்ற வாழ்வில் சிக்கியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மர்ம சவப் பேழையை திறந்து ஆய்வு செய்ய பிரான்ஸ் முடிவு!



பாரிஸ் நோர்த் டாம் மாதா கோவிலின் நிலத்தடியில் இருந்து புராதன கல் பேழை ஒன்று அண்மையில் மீட்கப்பட்டது. இதனை திறந்து ஆய்வு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2019 இல் தீக்கிரையான மாதா தேவாலயத்தின் கூரை உட்பட அதன் கட்டுமானங்களைப் புனரமைக்கும் பணிகள் தற்சமயம் அங்கு நடைபெற்று வருகின்றன. இதன் போது தேவாலயத்தின் உள்ளே ஒரு பகுதியில் தரை தோண்டப்பட்ட சமயம் சுமார் இருபது மீற்றர் ஆழத்தில் கல்லாலான புராதன சவப்பேழை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

மனித உருவிலான - நன்கு பாதுகாக்கப்பட்ட அந்த மர்மப் பேழை 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

அவர்கள் பேழையை திறக்காமலேயே அதன் உள்ளே இருக்கின்ற பொருள்களை என்டோஸ்கோபிக் கமரா மூலம் ஆய்வு செய்துள்ளனர். எலும்புக் கூட்டின் மேற்பகுதி, இலைகளாலான தலையணை, துணி மற்றும் சில பொருள்களை உள்ளே அடையாளம் கண்டுள்ளனர்.

பாதுகாப்பான இடம் ஒன்றில் வைக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பேழை விரைவில் தென் மேற்கு நகரமாகிய துளூசில் அமைந்துள்ள தேசிய தடயவியல் மருத்துவ நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் திறந்து பரிசோதிக்கப்பட விருப்பதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாருடையது என்ற அடையாளம் தெரியாத அந்த மனித எச்சம் எவ்வாறு, ஏன் நோர்த் டாம் தேவாலயத்தின் அமைவிடத்தின் கீழ் புதைக்கப்பட்டது? கடந்த பல நூற்றாண்டுகளாக அது அங்கேயே இருந்துவந்ததா, அல்லது அங்கு மீளப் புதைக்கப்பட்டதா? அதன் அடக்க வடிவமைப்பு முறை, அதன் காலம், இறந்தவரின் சமூக நிலை என்பன சொல்கின்ற செய்தி என்னவாக இருக்கும்? இவை போன்ற பல கேள்விகளை எழுப்பியிருக்கின்ற அந்தக் கல் பேழை தொடர்பான புதிர்களை அறிவதற்காக கத்தோலிக்கர்கள் உட்பட பிரான்ஸ் நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்துள்ளனர்.



# சரணடையும் உக்ரைன் வீரர்களின் உயிருக்கு உத்தரவாதமாம்

## ரஷ்யா அறிவிப்பு

சில மணி நேரத்தில் சரணடையும் உக்ரைன் இராணுவ வீரர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் என ரஷ்யா தெரிவித்துள்ளது. ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்களை விட்டுச் சென்றால் அசோவ்ஸ்டல் ஸ்டீல்வேர்க்ஸின் கோட்டையை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கூறியுள்ளது.

அவ்வாறு செய்பவர்கள் ஜெனிவா போர்க் கைதிகள் தொடர்பான உடன்படிக்கையின்படி நடத்தப்படுவார்கள் என ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் குறித்த ஒப்பந்தத்தின் விவரங்களை உக்ரேனியர்களுக்கு ரஷ்யப் படைகள் ஒரே இரவில் ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கு ஒருமுறை ஒளிபரப்பி வருவதாகவும் தெரிவித்துள்ளது. இருப்பினும் உக்ரேனிய அதிகாரிகள் இந்த வாய்ப்பை ஏற்கத் திட்டமிட்டதற்கான எந்த அறிகுறியையும் கொடுக்கவில்லை என்றும் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# சீனாவின் இராணுவ அச்சுறுத்தல்கள் அபத்தம் தாய்வான் வெளியுறவு அமைச்சு சாடல்!

தாய்வானுக்கு எதிரான சீனாவின் இராணுவ அச்சுறுத்தல்கள், அமெரிக்கா மற்றும் பிற ஜனநாயக நாடுகளின் ஆதரவை அதிகரிக்கும் என தாய்வான் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் இந்த ஆண்டு இதுவரை இரண்டு தடவைகள் தாய்வானுக்கு விஜயம் செய்த போதும் சீனா இராணுவ ரீதியான அச்சுறுத்தல்களை விடுத்தது. இது அபத்தமானது என தாய்வான் வெளியுறவு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கண்டித்துள்ளது.

தாய்வானுக்கு எதிரான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகார அரச படைகளின் அச்சுறுத்தல், சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான தாய்வானிய மக்களின் உறுதியை வலுப்படுத்தும். அத்துடன், ஜனநாயக தாய்வானுக்கு அமெரிக்கா மற்றும் பிற ஜனநாயக பங்காளிகளின் ஆதரவையும் ஈர்க்கும் என தாய்வான் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை பாதுகாக்கவும், சீனாவின் தொடர்ச்சியான விரிவாக்கத்தை தடுக்கவும் அமெரிக்கா மற்றும் ஒத்த எண்ணம் கொண்ட பிற நாடுகளுடன் தாய்வான் தொடர்ந்து ஒத்துழைப்பை வலுப்படுத்தும் எனவும் தாய்வான் வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



இதேவேளை, அமெரிக்க மக்களுக்கு கொடுங்கோலர்கள் மீது அன்பு இல்லை. மாறாக தாய்வானின் சுதந்திரத்தை விரும்பும் மக்களை உண்மையாக அமெரிக்கா ஆதரிக்கிறது என தாய்வானுக்குச் சென்று ஜனாதிபதி சாய் இங்- வென்னைச் சந்தித்த காங்கிரஸ் பிரதிநிதிகளின் ஒருவரான பென் சாஸ்ஸே தெரிவித்துள்ளார்.

தாய்வானுடன் அமெரிக்காவுக்கும் இடையே முறையான இராஜதந்திர உறவுகள் இல்லை என்றாலும், தாய்வானின் மிக முக்கியமான சர்வதேச ஆதரவாளராகவும் ஆயுத விநியோகஸ்தராகவும் அமெரிக்கா உள்ளது. இது சீன-அமெரிக்க உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தாய்வானில் உள்ள 2.3 கோடி மக்கள் மட்டுமே தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும். மாறாக சீன அல்ல என தாய்வான் அரசு தெரிவிக்கிறது.

இதற்கிடையே உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு, சர்வாதிகார நாடொன்றிடம் இருந்து ஜனநாயக நாடொன்று எதிர்கொள்ளும் அச்சுறுத்தலைக் காட்டுகிறது என தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் கூறினார்.

தாய்வான் சுதந்திரக் குழுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றுக்கு இன்று சனிக்கிழமை அனுப்பிவைத்த பதிவு செய்யப்பட்ட வீடியோ உரையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இறையாண்மையை நிலைநிறுத்துவது, ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது, ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளுடன் ஆதரவாக நிற்பது, ஒருவருக்கொருவர் உதவுவதே தாய்வானின் நிலைப்பாடு எனவும் தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் குறிப்பிட்டார்.

# ஐந்தாவது வாரமாக தொடர்ந்து சரிகிறது இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு





இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு தொடர்ச்சியாக ஐந்தாவது வாரமாக சரிந்துள்ளது. இந்தக் கையிருப்பு 247 கோடி டொலர்களால் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோலியப் பொருள்களுக்கான அதிக இறக்குமதிக் கொடுப்பனவுகளுக்கு மத்தியில், இந்திய ரிசர்வ் வங்கியானது, இந்திய ரூபா மதிப்பின் சரிவைத் தடுக்க, டொலர்களை விற்பனை செய்வதாகத் தெரிகிறது.

ரிசர்வ் வங்கியின் வாராந்திர புள்ளி விவரப்படி, ஏப்ரல் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 247 கோடி டொலர்களால் குறைந்து, 60 ஆயிரத்து 400 கோடியே 40 லட்சம் டொலர்களாக உள்ளது. கடந்த ஐந்து வாரங்களில், இந்தியாவின் அந்நிய செலாவணிக் கையிருப்பு 2,850 கோடி டொலரால் குறைந்துள்ளது. நாட்டின் அந்நியச் செலாவணிக் கையிருப்பு 2021 செப்டெம்பர் 3 இல், புதிய உச்சமாக 64 ஆயிரத்து 245 கோடியே 30 லட்சம் டொலர்களை எட்டியது. அதன் பின்னர் அதன் சரிவு அதிகமாக உள்ளது.

இதற்கிடையில், கடந்த வாரத்தில் தங்கத்தின் கையிருப்பு மதிப்பு 21.5 கோடி டொலர்களால் குறைந்து 4,251.9 கோடி டொலராக உள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இந்தியாவின் திரும்பப் பெறும் சிறப்புரிமைகளின் மதிப்பு 14.1 கோடி டொலர்கள் குறைவடைந்து 1,873.8 கோடி டொலர்களாக இருந்தது. சர்வதேச நாணய நிதியத்தில் இந்தியாவின் இருப்பு நிலை 3.4 கோடி டொலர்கள் குறைந்து 510.1 கோடி டொலர்களாக உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## கொரோனா அதிகரித்தாலும் அச்சம் வேண்டாம் என்கின்றார் டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால்



டெல்லியில் கடந்த சில நாள்களாக கொரோனா மெல்ல மெல்ல அதிகரித்து வருவது பொதுமக்கள் மத்தியில் சற்று அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இது குறித்து கருத்துத் தெரிவித்த டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், டெல்லியில் கொரோனா சூழல் குறித்து அரசு கண்காணித்து வருகிறது. பாடசாலைகளைப் பொறுத்தவரை தேவைப்பட்டால் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுவோம். கொரோனாப் பாதிப்பால் மக்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவது குறைந்துள்ளது. இதனால், மக்கள் பீதி அடையத் தேவையில்லை, என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

டெல்லியில் நேற்று முன்தினம் தினசரி பாதிப்பு எண்ணிக்கை 299 ஆக பதிவானது. கடந்த இரு தினங்களில் மட்டும் தொற்றுப் பாதிப்பு 118 சதவீதம் அதிகரித்துள்ளது.

கொரோனா அதிகரிப்பு குறித்து மக்கள் அச்சப்படத் தேவையில்லை எனத்தெரிவித்துள்ள மருத்துவ நிபுணர்கள், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் போன்ற கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர். சில வாரங்களுக்கு முன்னர்தான், கொரோனா தொடர்பான சகல கட்டுப்பாடுகளும் அங்கே நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## உக்ரைன் போருக்கு மத்தியிலும் இந்தியாவுக்கு ஆயுத தளவாடங்களை வழங்கியது ரஷ்யா

உக்ரைன் போருக்கு மத்தியிலும் இந்தியாவுக்கு அதிநவீன வான் பாதுகாப்பு ஆயுதத் தளவாட உதிரிப்பாகங்களை ரஷ்யா வழங்கியுள்ளது.

பகை நாடுகளின் விமானங்கள் மற்றும் ஏவுகணைகளில் இருந்து பாதுகாக்கும் வகையில், ரஷ்யாவிடம் இருந்து அதிநவீன எஸ்-400 ட்ரையம்ப் ரக வான்பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு 35 ஆயிரம் கோடிக்கு 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியா ஒப்பந்தம் செய்தது.

40 கி.மீ. முதல் 400 கி.மீ. வரையில் வேற்று நாட்டின் விமானம், ஏவுகணை அல்லது ஆளில்லா விமானங்களை வீழ்த்தும் வல்லமை கொண்ட ஆயுதமும் அந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் 600 கி.மீ. தொலைவில் நூற்றுக்கும் மேற்பட்ட இலக்குகளை இதன் மூலம் கண்காணிக்க முடியும். எந்த வான்வழி அச்சுறுத்தலை முதலில் சுட்டு வீழ்த்த வேண்டும் என்பதை முடிவு செய்யும் வாய்ப்பை அது தன்னை இயக்குவோருக்கு வழங்கும். நான்கு வெவ்வேறு ஏவுகணைகளுடன் கூடியது என்பது இந்த வான்பாதுகாப்பு கட்டமைப்பின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ள நெருக்கடியிலும், ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடை ஆகியவற்றுக்கு மத்தியிலும் இந்த வான்பாதுகாப்பு அமைப்பிற்கான சிமுலேட்டர், அதனுடன் தொடர்புடைய பயிற்சி உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கியுள்ளது.

ஒப்பந்தத்தில் எஞ்சியுள்ள ஆயுதத் தளவாடங்களின் வினியோகம் 3 அல்லது 4 மாதங்கள் தாமதிக்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பெறப்பட்ட வான் பாதுகாப்புக் கட்டமைப்பு, பாகிஸ்தானைக் கண்காணிப்பதற்காக மேற்கு மையத்தில் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இரண்டாவது கட்டமைப்பு ரஷ்யாவிடமிருந்து கிடைத்தும், அது சீனாவை கண்காணிக்கும் விதமாக கிழக்கு மையத்தில் பயன்படுத்தப்படும் எனவும் இந்திய பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

## கள்ளழகர் இறங்கும் நிகழ்வில் உயிரிழந்தோருக்கு நிவாரண உதவி வழங்குவதாக தமிழக அரசு தகவல்



உலகப்புகழ் பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரைத் திருவிழா கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவில் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி இரு தினங்களுக்கு முன் நடைபெற்றது.

இரு ஆண்டுகளுக்கு பின்னராக கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வு நடைபெற்றதால் இந்த நிகழ்ச்சியில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சியின்போது வைகை ஆற்றின் கரை அருகே திடீரென பயங்கர கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி சிலர் மயக்கமடைந்தனர். அவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்த போதும், அவர்களில் இருவர் உயிரிழந்தனர்.

இவ்வாறு மரணமானோரின் குடும்பத்தினருக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். உயிரிழந்த இருவரது குடும்பங்களுக்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் இருந்து உடனடியாக தலா 5 லட்சம் ரூபாவை வழங்கும்படியும், படுகாயமடைந்த ஒருவருக்கு 2 லட்சமும் மற்றும் லேசான காயங்களுக்கு உள்ளான எழுவருக்கு தலா ஒரு லட்சமும் வழங்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

# சாதாரண வெப்பநிலையில் வைத்து பாதுகாக்கக்கூடிய புதிய கொரோனா தடுப்பூசி இந்தியாவில் கண்டுபிடிப்பு




பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமும், உயிரி தொழில்நுட்ப ஆரம்ப நிலை நிறுவனமான மைன்வக்ஸும் இணைந்து கொரோனாவுக்கு எதிராக புதியதொரு தடுப்பூசியை உருவாக்கியுள்ளன.

இந்தத் தடுப்பூசியை குளிர் நிலையில் வைத்து பாதுகாக்கத்தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடுப்பூசிகளை 37 பாகை செல்சியஸ் வெப்ப நிலையில் 4 வாரங்கள் வைத்து பயன்படுத்தலாம். தடுப்பூசிகளை சுய 70 பாகை செல்சியஸ் வெப்பநிலையிலும் வைத்து பாதுகாக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய தடுப்பூசி, எலிகளுக்கு செலுத்தி பரிசோதிக்கப்பட்டுள்ளது. அதில் தடுப்பூசிகள் டெல்டா, ஒமிக்ரோன் உள்ளிட்ட உருமாறிய கொரோனா வைரஸ்களுக்கு எதிரான நோய் எதிர்ப்புச்சக்தியை அவை ஏற்படுத்துவது தெரிய வந்துள்ளது.

# இப்போது ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளில் வேடிக்கையாக மாற்றம்

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. விசனம்



(எவ்.முபாரக்)

ஒழுக்காற்று நடவடிக்கை முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கிண்ணியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

ஒழுக்காற்று நடவடிக்கை என்பது முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது. இருபதாம் திருத்த சட்டத்தின் பின் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள்.

ஆனால் வழங்கப்பட்டதோ தேசிய அமைப்பாளர் போன்ற பதவிகள்.

மீண்டும் நிதிச் சட்டமூலம், வரவு – செலவுத்திட்டம் போன்றவற்றில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

மீண்டும் ஒழுக்காற்று நடவடிக்கை என்றார்கள். நான்கு மாதங்களாக ஒன்றுமில்லை. ஆனால் இன்று அவர்கள் பஸில் ராஜபக்ஷவுடன் அமைச்சுக்களுக்காகப் பேரம் பேசிக்கொண்டிருக்கின்றனர். நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், பிரதி சபாநாயகர் வாக்களிப்பில் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து தம் கட்சியினர் வாக்களிக்காவிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார். வரவு – செலவுத் திட்டத்தின் பின்னர் கூறிய ஒழுக்காற்று நடவடிக்கையையே இன்னும் காணவில்லை.

இதில் தற்போது புதிதாக ஒன்று.

அமைச்சு பதவிகளுக்கு பேரம் பேசிக் கொண்டிருப்பவர்கள் எவ்வாறு எதிர்க் கட்சிகளுடன் இணைந்து வாக்களிப்பார்கள்? இது ஒன்றும் ஹக்கீமுக்கு தெரியாமலில்லை.

மக்களை ஒழுக்காற்று நடவடிக்கை என்னும் பெயரில் அவரும் ஏமாற்றி வருகிறார் என்பதே உண்மை. ராஜபக்ஷக்கள் எவ்வாறு சிங்கள மக்களை ஏமாற்றி வந்தனரோ அதேபோன்றே முஸ்லிம்களை இந்த முஸ்லிம் கட்சித் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றனர். – எனத் தெரிவித்தார்.





# காரைதீவு அபிவிருத்தி அமைப்பினால் புலமையாளர்கள் கௌரவிப்பு விழா

(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு ஏற்பாடு செய்த புலமையாளர் கௌரவிப்பு விழா அமையத் தலைவர் பிரதம பொறியியலாளர் பி.ராஜமோகன் தலைமையில் காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் நடைபெற்றது .

அந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பொலன்னறுவை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சிவ.சசிகரன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கே.ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் செ.புவனேந்திரன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து சிறப்பித்தார்கள்.

வசதி குறைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

புலமையாளர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# இசை நாட்டிய நிகழ்ச்சிகளுடன் களைகட்டிய சுவாமி விபுலாநந்தரின் 98ஆவது துறவற தினம்

## காரைதீவில்







(காரைதீவு நிருபர் சகா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றம் ஒழுங்கமைத்த சுவாமி விபுலாநந்தரின் 98 ஆவது துறவற தின விழா சித்ரா பௌர்ணமி தினத்தில் – நேற்று முன்தினம் – காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் திருமுன்னிலை அதிதியாக சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் கலந்து கொண்டு நந்திக் கொடி ஏற்றி ஆசியுரை வழங்கினார்.

பணிமன்ற தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆன்மீக அதிதிகளாக சிவஸ்ரீ இ.மகேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ சி.சாந்தரூபன் குருக்கள்,சிவஸ்ரீ ந.பத்மலோஜன் சர்மா,

சிவஸ்ரீ சுபாஸ்கர் சர்மா கலந்து வேதபாராயணம் ஓதி சிறப்பித்தனர்.


பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி புளொரன்ஸ் பாரதி கென்னடி கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக தவிசாளர் கி.ஜெயசிறில், பிரதேச செயலாளர் சி.ஜெகராஜன், சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, சைவப்புலவர் சு.துஷ்யந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக சுவாமி பிறந்த இல்லத்தில் விடேபூசை நடைபெற்றது. பின்னர் சுவாமியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து,காவி வஸ்திரம் போர்க்கப்பட்டு, துறவற கீதம் இசைக்கப்பட்டது. அரங்கில் இசை நாட்டிய நிகழ்ச்சிகள் மேடையேறின.

மாவட்ட செயலக இந்துசமய கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தார்.



# குமுக்கனில் 210 சித்தர்களுக்கு வேள்வி

(காரைதீவு நிருபர் சகா)

அகிலத்தை ஆளுகின்ற 210 சித்தர்களை வேண்டி கிழக்கின் தென்கோடியில் உள்ள குமுக்கன் ஆற்றங்கரையில் அருள் பாலிக்கும் காளியம்மனுக்கு அற்புத வேள்வி நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் சித்ரா பௌர்ணமியன்று 'சித்தர்களின் குரல்' அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ தலைமையில் இந்த யாகம் சிறப்பாக நடைபெற்றது.



நாள்முழுவதும்நிறைவானஅபூர்வமூலிகைகளினால் முன்னெடுக்கப்பட்ட இந்த அற்புத வேள்வியில் ஆயிரக் கணக்கில் மந்திர ஜெபம், பல மணி நேர அபிஷேகம், நிறைவான வன போஜனம் இடம்பெற்றன.

பூரண ஒத்துழைப்பு தந்த சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மகேஸ்வரன் சுவாமிகள், சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகள், விவே, விஷோ பிரசாத், டிரோன் மற்றும் பூரண பாதுகாப்பு வழங்கிய குமண சரணாலய வனத்துறை அதிகாரிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# காலிமுகத்திடல் போராட்டத்தை குழப்ப சதி; மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் கணேமுல்ல இராணுவ முகாம் விஜயம்!

இராணுவத்தின் குழுவொன்று போராட்டக்காரர்களைப் போன்று, கொழும்பு – காலிமுகத்திடல் மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு அண்மித்த கோட்டா கோ கம போராட்ட களத்துக்கு அனுப்பதயார்ப்படுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன எனவும், அதன் பின்னணியில் பாரிய சதி உள்ளதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய, அது தொடர்பில் ஆராய இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு நேற்று (ஞாயிற்றுக் கிழமை) கணேமுல்ல இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர் மட்டக் குழுவொன்று இவ்வாறு கம்பஹா, கணேமுல்ல – கடவத்த வீதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு இவ்வாறு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த உயர் மட்ட குழு நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இராணுவத்தின் உயரதிகாரிகளை அழைத்து, இந்த விடயம் தொடர்பில் விளக்கம் கேட்டிருந்த நிலையிலேயே நேற்று (ஞாயிற்றுக் கிழமை) முகாமுக்கு சென்று சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமான நேரம் அங்கு தங்கியிருந்து, முகாமின் பல இடங்களையும் மேற்பார்வை செய்தனர்.

கடந்த இரு நாள்களுக்கு முன்னர், கணேமுல்ல இராணுவ முகாமில் இராணுவ குழுவொன்றுக்கு போராட்ட காலத்தில் பயன்படுத்தப்படும் ஆர்ப்பாட்ட கோஷங்களை சொல்லிக் கொடுத்து பயிற்றுவிப்பதை வெளிப்படுத்தும் காணொலியொன்று சமூக வலைத் தளத்தில் வெளியானது.

இந்த நிலையில் இராணுவத்தினர் அல்லது வேறு தரப்பொன்று காலி முகத்திடலை அண்மித்த போராட்ட களத்துக்குள்நுழைந்து அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பி, பின்னர் பாதுகாப்புத் தரப்புடன் முறுகல் நிலைமையை ஏற்படுத்தி, அதனூடாகப் பாதுகாப்புத் தரப்பை பலப்பிரயோகம் செய்ய தூண்டும் சதித்திட்டம் ஒன்று உள்ளதாக அந்த காணொலி ஊடாகவும் பிற தகவல்கள் ஊடாகவும் வெளிப்படுத்தப்பட்டன. இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையிலேயே, மேற்படி ஆணைக்குழு, அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்து, இவ்வாறு நேற்று கணேமுல்ல முகாமுக்கும் சென்று கள ஆராய்வுகளை முன்னெடுத்தனர்.

இவ்வாறான நிலையிலேயே நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் பொலிஸாரால் அழைக்கப்பட்டால் மாத்திரமே அவர்களுக்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கு இராணுவம் நடவடிக்கை எடுக்கும் எனவும் மாறாகத் தற்போது பல்வேறு குழுக்களால் குறிப்பிடப் படுவதைப் போன்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் மத்தியில் வன்முறையைத் தூண்டும் வகையில் இராணுவத்தினர் செயற்படவில்லை என்றும் இராணுவ ஊடகப்பிரிவு அறிக்கை வெளியிட்டது.

அத்துடன் அமைதியாக போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக இராணுவ அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பிரயோகிப்பதற்கு எவ்வித ஆயத்தமும் இல்லை என பாதுகாப்பு செயலாளர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனநாயக முறையில் முன்னெடுக்கப்படும் அமைதிப் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினர் எவ்விதத்திலும் பயன்படுத்தப்பட மாட்டார்கள் என பாதுகாப்பு செயலாளரை மேற்கோள்காட்டி, பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, காலி முகத்திடலை அண்மித்த போராட்டக்காரர்களின் நலன் மற்றும் அவர்களது பாதுகாப்பு தொடர்பிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பூரண அவதானம் செலுத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) இரவு, போராட்ட களத்துக்கு வந்த ஆணைக்குழுவின் விசாரணைப் பணிப்பாளர் ஒருவர் தலைமையிலான குழுவினர் இது தொடர்பில் ஆரயந்ததுடன், நேற்றும் (ஞாயிற்றுக் கிழமை) விசாரணைப் பணிப்பாளர் ஒருவரின் கீழ் சிறப்புக் குழுவினர் முழுமையாக இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர். கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடு ஒன்றுக்கு அமைய அவர்கள் இவ்வாறு அந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

குறிப்பாக, கோட்டா கோ கம எனும் ஆர்ப்பாட்ட தளம், அரசாங்கத்தால் ஆர்ப்பாட்டம் செய்யவென வேறுபடுத்தப்பட்ட பூமிப் பகுதியிலேயே அமைந்துள்ள நிலையில், அங்கு ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற (மலசல கூடங்கள், நீர் வசதி) போதுமானவசதிகள் இல்லாமை, அப்பகுதியில் தொலைத்தொடர்புகள் வசதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடங்கல்கள், இடையூறுகள் தொடர்பில் இதன்போது ஆணைக் குழுவின் அதிகாரிகள் விசேட அவதானம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் தொற்றுநோய்கள் அதிகரிக்கும் அபாயம் தாய், சிறுவர்கள் மரணிக்கும் ஏதுநிலை வரலாம்!

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

பொது சுகாதார சேவையை தொடர்ந்து மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை முறையாக வழங்கத் தவறினால் தொற்று நோய்கள் அதிகரிக்க இடமிருப்பதுடன் தாய், சிறுவர்களின் மரண வீதம் அதிகரிக்கும் அபாயம் இருக்கின்றது என இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக பொது சுகாதார சேவையை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான வசதிகள் கிடைக்கப்பெறாமையால் ஏற்படப்போகும் பாதிப்பு தொடர்பாகக் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார, அரசியல் நெருக்கடி காரணமாக இலங்கையில் காலாகாலமாக முன்னெடுக்கப்பட்டுவந்த பொதுச் சுகாதார சேவை முற்றாக பாதிக்கப் பட்டுள்ளது. குறிப்பாக பொது மக்கள் சுகாதார சேவையை முன்னெடுத்துச் செல்லும் சுகாதார அதிகாரிகளுக்குத் தேவையான எரிபொருள் விநியோகிக்கப்படுவதில்லை.

சுகாதார அதிகாரிகள் காரியாலயங்களின் வாகனங்களுக்கும் எரிபொருள் இல்லை. மருந்துப் பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் குளிரூட்டப்பட்ட அறைகளுக்குத் தேவையான மின்சாரம் இல்லை. அங்கிருக்கும் ஜெனரேட்டர்களுக்குத் தேவையான எரிபொருள் இல்லை.

இதன் காரணமாகப் பொதுமக்கள் சுகாதார சேவை முன்னெடுக்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இதனால் உலகில் சிறந்த சுகாதார சேவையை மேற்கொள்ளும் நாடு என்ற பெயரை தற்போது நாங்கள் இழந்து வருகின்றோம்.

அத்துடன் எதிர்காலத்தில் பாரிய சுகாதார பாதிப்புகள் ஏற்படும் அபாயம் இருக்கின்றது. குறிப்பாக தொற்று நோய்கள் அதிகரிக்கலாம், தாய், சிறுவர்களின் மரண வீதம் அதிகரிக்கும் அபாயம் இருப்பதுடன் பாடசாலை சிறுவர்களின் மந்தபோசணை வீதம் அதிகரித்துச் செல்லும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தாய்மாருக்கான சுகாதார சேவை, நோய் எதிர்ப்புசக்தியை அதிகரித்து நோய்கட்டுப்படுத்தும் நடவடிக்கை தடைப்பட்டுள்ளதால் மீண்டும் தொற்று நோய்கள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அதனால் தற்போது கைவசம் இருக்கும் சுகாதார வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்து, மக்களின் உயிர்களைப் பாதுகாக்க அதனைப் பயன்படுத்தும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சுகாதார அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று பொது மக்கள் சுகாதாரத் தேவையை முன்னெடுப்பதற்குத் தேவையான அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இல்லாவிட்டால் மேலும் தொற்று நோய்கள் பரவும் நிலை அதிகரிக்கும். தாய், சிறுவர்களின் மரண வீதம் பாரியளவில் அதிகரிக்கும் வாய்ப்பு இருக்கின்றது. அதனால் இது தொடர்பாக சுகாதார அதிகாரிகள் அவதானம் செலுத்தி மக்களின் உயிர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். – என்றார்.

## பிரதமர் மஹிந்தவும் பதவி விலகவேண்டும்

### அத்துரலியே ரத்ன தேரர் வலியுறுத்து

மகாசங்கத்தினரது ஆலோசனைகளுக்கு மதிப்பளித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும்.

காலி முகத்திடலில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்காவிடின் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவக் கொள்கையால் நாட்டு மக்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். சுபீட்சமான எதிர்காலக் கொள்கைக்கு முரணாக செயற்பட்டதன் விளைவை அரசாங்கம் தற்போது எதிர்கொள்கிறது.

அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு நாடாளுமன்ற மட்டத்தில் தீர்வு காண முடியாமல் இருப்பதற்கு அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் பிரதான தடையாக உள்ளது. இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக 20 ஆவது திருத்தத்தை நீக்கி 21 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்காகவே இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதையும் மகாசங்கத்தினர் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள். மகாசங்கத்தினரது ஆலோசனைக்கு மதிப்பளித்து பிரதமர் பதவி விலக வேண்டும்.

காலி முகத்திடலில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் இளம் தலைமுறையினரது கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்.

மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். மக்களின் ஜனநாயக போராட்டம் இறுதியில் இராணுவ போராட்டமாக மாற்றமடையுமா? என்ற அச்சம் காணப்படுகிறது– என்றார்.

## பஸில் நாட்டைவிட்டு ஜெட்டில் வெளியேறவே இல்லையாம்!

பஸில் ராஜபக்ஷ சனிக்கிழமை இரத்மலானை கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தனியார் ஜெட் விமானத்தில் நாட்டை விட்டு வெளியேறினார் என்ற செய்திகளை விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் மறுத்துள்ளது.

இந்த இக்கட்டான நேரத்தில் பொருளாதாரத்துக்கு உறுதுணையாக இருக்கும் இந்த சர்வதேச பயணிகளின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் தவறான தகவல்களைப் பரப்புவதை தவிர்க்குமாறு அந்த நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ , அமெரிக்காவின் கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் ஜெட் விமானத்தில் இரத்மலானை விமான நிலையம் ஊடாக நாட்டை விட்டு வெளியேறினார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன. இதேவேளை கொரோனாத் தொற்றுறுதியாகியிருந்த பஸில் ராஜபக்ஷ கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.